# சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

**கணிதம் - தரம் 05 / இரண்டாந் தவணை – வாரம் 8**


**தயாரிப்பு – இரத்தினபுரி கல்வி வலயம், ஆரம்பபிரிவு / ஆசிரிய ஆலோசகர் வீ.ராஜகுமாரி**

## 19.1: தரவுகளைக் கையாளல் -1

- தரவுகளை நிரல் வரைபு மூலம் வகைக் குறிப்பார்.
- வகைக்குறித்த தகவல்களை வாசிப்பார்.

I. தகவல்கள் சேகரித்தல், வீட்டில் அம்மா, அப்பா, உட்பட குடும்ப உறுப்பினர்களுக்கு விருப்பமான பழங்கள் பற்றி அறிக்கைப்படுத்துவதற்கு வழிப்படுத்துங்கள்.

| பழங்கள் | குடும்ப உறுப்பினர் | எண்ணிக்கை |
|---|---|---|
| உ+ம் : மாம்பழம் | IIII | 4 |
| வாழைப்பழம் | IIIII II | 7 |
| கொய்யாப்பழம் | III | 3 |
| பலாப்பழம் | IIIII | 5 |
| பப்பாசிப்பழம் | II | 2 |
| தோடம்பழம் | IIIII I | 6 |





- இத்தகவல்களை நிரல் வரைபில் வகைகுறித்துக் காட்டுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- பின்வரும் வினாக்களுக்கு விடை கூற வழிப்படுத்துங்கள்.

1. வீட்டில் அதிகமானோருக்கு விருப்பமான பழம் எது? ........................
2. தோடம்பழத்தை விரும்புவோர் எத்தனை பேர்? ................................
3. பலாப்பழத்தை விரும்புவோர் எத்தனைபேர்? ...................................

II. பிள்ளையை தங்களின் வீட்டிற்கு அருகே இருக்கும், வாகன போக்குவரத்துள்ள பாதையில் ஓரமாக நிறுத்தி 30 நிமிடங்களில் போய் வருகின்ற வாகனங்கள் எவ்வளவு என அவதானித்து குறித்துக்கொள்ள வழிப்படுத்துங்கள்.

- பின்வரும் அறிக்கைபடுத்தல் அட்டவணையில் குறித்துக் கொள்க.

| வாகனங்கள் | சென்ற தடவைகள் | தொகை |
|---|---|---|
| கார் | | |
| பேருந்து | | |
| முச்சக்கரவண்டி | | |
| மிதிவண்டி (சைக்கிள்) | | |
| லொறி | | |
| மோட்டார்சைக்கிள் | | |
| டெக்டர் | | |





- இத்தரவுகளை நிரல் வரைபில் வகைகுறித்துக் காட்டுங்கள்.
- வரைபைக் கொண்டு வினாக்களுக்கு விடையளிக்க வழிப்படுத்துங்கள்.

1. குறித்த நேரத்தில் அதிகமாக பயணித்த வாகனம் எது? .............................
2. குறித்த நேரத்தில் குறைவாகப் பயணித்த வாகனம் எது? .......................
3. பயணிக்காத வாகனங்கள் இருக்கின்றனவா? ....................... அவை? .......................
4. முச்சக்கரவண்டி எத்தனை தடவைகள் பயணித்தன? ..............................
5. பயணம் செய்த வாகனங்கள் எல்லாமாக எத்தனை? ...............................

III. A, B, C, D, E, F எழுதப்பட்ட தாயக்கட்டையை 30 தடவைகள் உருட்டி கீழ்வரும் அட்டவணையில் குறித்து கொள்ள வழிப்படுத்துங்கள். அதனை நிரல் வரைபில் வரைக.


| எழுத்து | தடவைகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| A | \|\|\|\|\| \| | 6 |
| B | | |
| C | | |
| D | | |
| E | | |
| F | | |




- பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
  1. கூடிய தடவைகள் விழுந்த எழுத்து எது? ...........................
  2. குறைவான தடவைகள் விழுந்த எழுத்து எது? ....................
  3. சமமான தடவைகள் விழுந்த எழுத்து எது? .........................

IV. பிள்ளைகள் சிலர் விரும்பும் செல்லப்பிராணிகள் பற்றிய தகவல்கள் அட்டவணையில் தரப்பட்டுள்ளது. இத்தகவல்களை நிரல் வரைபில் வகைகுறித்துக் காட்டுங்கள்.

| செல்லப் பிராணி | விரும்புவோர் தொகை |
|---|---|
| நாய் | 18 |
| பூனை | 17 |
| அணில் | 15 |
| கிளி | 16 |
| மைனா | 14 |




- வினாக்களுக்கு விடையளிக்குக.
  1. கூடுதலான பிள்ளைகள் விரும்பும் செல்லப்பிராணி எது? ................................
  2. அணிலை விரும்புவோர் எத்தனைப் பேர்? .......................................
  3. கிளியை விரும்புவோரை விட மைனாவை விரும்புவோர் எத்தனைப் பேர் கூடுதலாக உள்ளனர்? .................................
- பாடநூல் பயிற்சிகள் – பக்கம் 85, 86, 87, 88, 89 செய்து காட்ட வழிப்படுத்துங்கள்.